## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – பழங்குடியினர் மேம்பாடு – மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களால் 18.07.2017 அன்று சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு – பழங்குடியின மக்களுக்காக திருச்சி மாவட்டம், பச்சமலை மற்றும் தென்புறநாட்டில் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தலா ரூ.50 இலட்சம் [2Xரூ.50 இலட்சம் - ரூ.1,00,00,000/– (ரூபாய் ஒரு கோடி)] மதிப்பில், இரு சமுதாயக் கூடங்கள் கட்டுதல் – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் [ப.மே1(2)] துறை

அரசாணை (ப) எண்.252

நாள் 09.10.2017
ஹேவிளம்பி வருடம், புரட்டாசி 23
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டது :

மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்கள் சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு நாள் 18.07.2017.

*******

**ஆணை :-**

மாண்புமிகு அமைச்சர் (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களால் 18.07.2017 அன்று சட்டமன்றப் பேரவையில் கீழ்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

**பழங்குடியின மக்களுக்காக இரண்டு சமுதாயக் கூடங்கள் கட்டுதல்**

"பழங்குடியின மக்கள் தங்கள் வீட்டு சுபநிகழ்ச்சிகளை அனைத்து வசதிகளுடன் மகிழ்ச்சியாக மிகச் சிறப்பாக கொண்டாடும் வகையில் திருச்சி மாவட்டம், பச்சமலை மற்றும் தென்புறநாட்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் தலா ரூ.50 இலட்சம் மதிப்பில் இரு சமுதாயக் கூடங்கள் கட்டப்படும்".

2. மேற்காணும் அறிவிப்பிற்கிணங்க, பழங்குடியின மக்களுக்காக திருச்சி மாவட்டம், பச்சமலை மற்றும் தென்புறநாட்டில் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தலா ரூ.50 இலட்சம் [2Xரூ.50 இலட்சம் - ரூ.1,00,00,000/– (ரூபாய் ஒரு கோடி)] மதிப்பில், இரு சமுதாயக் கூடங்கள் கட்டிட நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

..2..

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"4225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 02 பழங்குடியினர் நலன் – 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – மாநிலச் செலவினங்கள் – JA விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 16 – பெரும் பணிகள்".
(த.தொ.கு.4225 02 796 JA 1602)

4. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள கட்டுமானப் பணியினை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்திடம் ஒப்படைப்பதற்கும், கட்டுமானப் பணியின் முன்னேற்றத்திற்கேற்ப நிதியினை பெற்று, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), பொது வைப்பீடு (Public Deposit) கணக்கில் செலுத்திட பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

5. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியின நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.49523/நிதி[ஆதி(ம)பந]/2017, நாள் 06.10.2017-இல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர் (முகூபொ).

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை–18.
மாவட்ட ஆட்சியர், திருச்சி
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/6/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–8.

<u>நகல்</u>
நிதி [ஆதி(ம)பந / வ.செ.பொது–II] துறை, சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந5/கமபா/ஆதிந2/அநமு1) துறை,
சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதுநிலை தனிச் செயலர், சென்னை–9.
இருப்புக்கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஏ.ரா. தங்கம்
10.10.17
பிரிவு அலுவலர்
10/10/17